*நேரடித் தொடர்பின் மதிப்பு*

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு இளைஞன் தனது பெண் தோழி தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தான். நாணம் என்ற தன்மை கொண்ட அவன் ஒவ்வொரு நாளும் அவளுக்குக் கடிதம் மூலமாக தனது அன்பான ஏற்பாடு பற்றி எழுதிக் கொண்டிருந்தான். அந்த அன்புக் குறிப்பானது ஒவ்வொரு நாளும் தவறாமல் அஞ்சலில் அனுப்பப்பட்டது. கடைசியில் மூன்று வாரங்கள் கழித்து அவனது பெண் தோழி திருமணம் முடித்துக் கொண்டாள்; ஆனால் அவள் கடிதம் கொண்டு வந்த அந்த அஞ்சலகரைத் திருமணம் செய்து கொண்டாள்!

**இன்னொருவரின் கனவுக்காக செய்த தியாகங்கள்:**

ஆல்பிரெக்ட் டியூரெர் என்பவர் ஒரு ஓவியராகும்படி கனவு கண்டார். அவரிடம் பணம் இல்லாதிருந்தது. அவர் ஜெர்மனியில் உள்ள நியூரெம்பர்க் நகருக்குச் சென்று, அங்கிருந்த ஒரு முதிய மனிதருடன் வாழ்ந்தார், அவரும் ஏழையாய் இருந்தார். ஒருவர் வேலை செய்வதென்றும் ஒருவர் படிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. அம்முதியவர், தாம் கடினமாய் உழைப்பதென்றும், டியூரெர் பள்ளி சென்று படிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பிற்பாடு அம்முதியவர் தமது கடின உழைப்பானது தனது கரங்களை இனி ஒருக்காலும் வரைதல் செய்ய முடியாதபடி இறுக்கி விட்டது மற்றும் கரணைகளை ஏற்படுத்தி விட்டது என்று கண்டறிந்தார். நடந்ததை அறிந்த டியூரெர் மிகவும் வருத்தமுற்றார். ஒரு நாள் அவர் அறைக்குள் நுழைகையில் தமது நண்பர் தம் கரங்களைக் குவித்து ஜெபித்துக் கொண்டிருக்கக் கண்டார். அவரைப் பாராட்டும் வகையில் இவர் அந்தக் குவிந்த கரங்களை படமாய் வரைந்தார். அந்தக் கரங்கள் சுயநலமற்ற சேவை மற்றும் நற்குணப் பண்பு ஆகியவற்றின் அடையாளமாய் நிலைத்திருக்கின்றன.

## உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?

I. *பாவம் என்றால் என்ன?*

_______________________ *ரோமர் 14:23*

_______________________ *1 யோவா. 3:4*

_______________________ *1 யோவா. 5:17*

_______________________ *யாக். 4:17*

II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?*

1. ______________ *பாவஞ் செய்து ... ரோமர் 3:23*
2. *நீதிமான்* ______________ *இல்லை. ரோமர் 3:10*
3. *நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை* ______________, ______________, ______________ *நமக்குள் இராது. 1 யோவா. 1:8*

III. *பாவிகள் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களின் அடைவிடம் எதுவாயிருக்கும்?*

| பாவி | இரட்சிக்கப்பட்டவர் |
|---|---|
| *மத். 25:41* | *மத். 25:46* |
| *வெளி. 14:11* | *வெளி. 14:13* |
| *மத். 25:30* | *வெளி. 21:4* |
| *ரோமர் 2:9* | *மத். 25:23* |
| *யோவா. 8:21* | *யோவா. 14:3* |
| *மத். 10:28* | *1 பேது. 1:3, 4* |

VI. *நீங்கள் செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற எதைப் பொறுத்து உங்களின் நித்திய அடைவிடம் தீர்மானிக்கப்படும்?*

| | |
|---|---|
| *ரோமர் 2:8* | *மத். 7:21* |
| *2 தெச. 1:8* | *எபி. 5:9* |

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940


பரலோகம்
மன்னிக்கப்படுதல்
புது வாழ்வு
இரட்சிக்கப்படுதல்
மன்னிக்கப்படாமை
பழைய வாழ்வு
இழந்து போகப்படுதல்
நரகம்

*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# "உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?"

"உங்களின் நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்?" என்ற இந்தப் பாடத் தாளானது ஏறக்குறைய இந்நூலில் உள்ள எந்த ஒரு பாடத் தாளுக்குப் பிறகும் பயன்படுத்தப்பட முடியும். ஒருவேளை இந்தப் பாடத்தாளை, "இரட்சிப்பு" என்ற பாடத் தாளுக்குப் (பாடம் 4) பிறகு எடுத்துரைப்பது மிகச் சிறந்ததாக இருக்கும். மாணவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் பற்றிச் சிந்திக்க வைக்க முயற்சி செய்கையில் ஆசிரியர் இந்தப் பாடத் தாளைப் பயன்படுத்த விரும்புவார்.

### நோக்கம்

கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளை எடுத்துரைத்து, கற்பவர் இயேசுவுக்கு அளிக்கும் பதில் செயலானது அவரின் நித்திய அடைவிடத்தைப் பற்றிய விஷயத்தில் விளைவுண்டாக்கும் என்று உணர உதவுவதே "அடைவிடம்" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது.

### பாடச் சுருக்கம்

இந்தப் பாடமானது, பாவம் என்றால் என்ன என்றும், எல்லாரும் பாவம் செய்திருக்கின்றோம் என்றும் காண்பிக்கின்றது. மன்னிக்கப்படாத பாவியின் அடைவிடமானது, மன்னிக்கப்பட்ட, இரட்சிக்கப்பட்ட பாவியின் அடைவிடத்திலிருந்து மாறுபடுகின்றது. நாம் தண்டிக்கப் படுகின்றோமா அல்லது வெகுமதி பெறுகின்றோமா என்பது நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறோமா அல்லது கீழ்ப்படிவதில்லையா என்பதைப் பொறுத்ததாக உள்ளது.

---

### அறிமுகம்

முந்திய பாடங்களில் நாம், பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதாரமூலம் பற்றியும், பாவத்திலிருந்து மனிதரை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம் பற்றியும், மற்றும் இயேசுவே இரட்சிப்பின் வழி என்பது பற்றியும் படித்தோம். இயேசுவுக்குக் கீழ்ப்படிவதை நாம் தெரிவு

செய்யாவிட்டால், நமது நித்திய அடைவிடம் எதுவாயிருக்கும்? (அப். 3:23ஐ வாசிக்கவும்.) இயேசுவின் சித்தத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பது நமக்கு மிகவும் முக்கியமான விஷயமாக உள்ளது. நமது நித்திய அடைவிடம் அதைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. பாவம் என்பது நம் நித்திய அடைவிடத்தைப் பாதிக்கின்றது. நாம் ஒருக்காலும் பாவம் செய்திரா விட்டால், தண்டிக்கப்படுதல் பற்றி நாம் ஒருபோதும் கவலைப்படத் தேவையில்லை.

## I. *பாவம் என்றால் என்ன?*

பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ளாத காரணத் தினால், நம்மில் பலர் நாம் எவ்வளவு அடிக்கடி பாவம் செய்கிறோம் என்பதை உணருவதில்லை. புதிய ஏற்பாட்டில் "பாவம்" என்ற வார்த்தை யானது *hamartia* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகின்றது, இது "குறியைத் தவற விடுதல், கடமையில் தவறுதல்" என்று அர்த்தப்படுகின்றது. பாவம் என்பது மனித வரலாற்றில் மிகப் பிரபலமாக இருப்பதால் அவ்வார்த்தை வேதாகமத்தில் பலமுறைகள் வருகின்றது.

நாம் எவ்விதம் வாழ வேண்டும் என்பதற்குத் தராதரமாகத் தேவன் தம்மையே, தம்முடைய சொந்த இயல்பையே நமக்குக் கொடுத்திருக் கின்றார் (1 பேது. 1:14-16). தேவன் நம்மை அவருடைய சாயலாகவே படைத்தார் (ஆதி. 1:26, 27). நாம் பாவம் செய்யும் பொழுது, தேவன் நமக்களித்த (அவருடைய) இயல்பை மீறுகின்றோம். நமக்காகத் தேவன் ஏற்படுத்திய வடிவமைப்பை நிறைவேற்றத் தவறிவிடுகின்றோம். நாம் பாவம் செய்யும் பொழுது, தேவன் நமக்களித்த (அவருடைய) இயல்பைக் கெடுத்துப் போடுகின்றோம்.

பாவம் என்றால் என்ன என்பது பற்றி வேதாகமம் நான்கு கூற்றுக் களைக் கொடுக்கின்றது. பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுகின்ற முதலாவது கூற்றானது பவுலினால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று பவுல் எடுத்துரைக்கின்றார்? [ரோமர் 14:23ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் "விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே" என்று எழுதி நிரப்பவும்.] நாம் சரியென்று இணங்காதவைகளைச் செய்தலே பாவம் ஆகும். தேவனுடைய வசனம் கூறுகின்றவைகளை நாம் செய்கின்ற பொழுது, நாம் சரியான வற்றைச் செய்கின்றோம் என்ற விசுவாசத்துடன் நாம் செயல்பட முடியும், ஏனெனில் தேவனுடைய செய்தியை, தேவனுடைய வசனத்தைக் கேட்பதினாலேயே விசுவாசம் வருகின்றது (ரோமர் 10:17). தேவனுடைய வசனம் கூறுகின்றது என்ன என்று நாம் அறிந்தால், நாம் சரியானதைச் செய்கின்றோமா அல்லவா என்ற சந்தேகம் இல்லாமல் நாம் செயல்பட முடியும். இருப்பினும், சில விஷயங்களைப் பொறுத்தமட்டில் தேவன் என்ன கூறியுள்ளார் என்பதை நாம் புரிந்து கொள்ளாதிருக்கும் காரணத்தினால், நாம் சரியானதையே செய்கிறோமா அல்லவா என்பதில் நாம் நிச்சயமற்றவர்களாய் இருக்கலாம். சில விஷயங்கள் தவறானதாய் இருக்கலாம் என்று நாம் நம்பும் பொழுதோ, அல்லது சில விஷயங்களைச்

செய்வது சரியானதாயிருக்குமோ என்று ஐயப்படும் பொழுது, ஆனாலும் எவ்வாறோ அவற்றைச் செய்தால், நாம் பாவம் செய்கின்றோம். விசுவாசத்தினால் வராத யாவும் பாவமாகவே இருக்கின்றது. தான் செயல்பட வேண்டுமா இல்லையா என்ற சந்தேகத்துடன் செயல் படுகின்றவர் பாவம் செய்கின்றார்.

நாம் சிந்தனை செய்கின்ற இரண்டாம் கூற்றானது அப்போஸ்தலரான யோவானால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று யோவான் கூறினார்? [1 யோவா. 3:4ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் "நியாயப்பிரமாணத்தை மீறுதலே பாவம்" என்று எழுதி நிரப்பவும்.] "மீறுதல்" என்றால், "சட்டத்தின்படி அமைக்கப்பட்ட எல்லைகளுக்கு அப்பால் செல்லுதல், சட்டத்தின் அனுமதி இன்றிச் செயல் படுதல்" என்று அர்த்தப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல (கலா. 3:24, 25) என்பதால் அந்த நியாயப்பிரமாணத்தைப் பற்றி யோவான் இந்த இடத்தில் எழுதியிருக்க மாட்டார். இயேசுவால் போதிக்கப்பட்ட கொள்கைகளான "கிறிஸ்துவின் பிரமாணத்தை" (1 கொரி. 9:21)ப் பற்றியே யோவான் இவ்விடத்தில் எழுதியிருக்க வேண்டும். இயேசுவின் போதனை யினால் தன் வாழ்க்கை வழியைக் கட்டுப்படுத்தாது உள்ள நபர் பாவம் செய்கின்றார், மற்றும் இந்தக் காரணத்தினால் அவர் தேவனுடைய பார்வையில் பாவியாக நியாயம் தீர்க்கப்படுகின்றார். நியாயப் பிரமாணத்தை மீறுதல் என்பது பாவமாக உள்ளது.

நாம் சிந்தனை செய்கின்ற மூன்றாவது கூற்றும் யோவானாலேயே எழுதப்பட்டதாகும். பாவம் என்றால் என்ன என்று யோவான் கூறுகின்றார்? [1 யோவா. 5:17ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் ''அநீதியெல்லாம் பாவம்தான்'' என்று எழுதி நிரப்பவும்.] சில அநீதியான செயல்களை பாவம் என்று நாம் அடிக்கடி கருதுகின்றோம், ஆனால் மற்றவற்றை அவ்வளவு தீவிரமானதாக நாம் நம்புவதில்லை, அவற்றை நாம் பாவம் என்று கருதுவதில்லை. ஒரு அநீதியான செயலில் காணப்படக் கூடிய தீவிரத் தன்மை அல்லது தீவிரத் தன்மை குறைவு ஆகியவற்றைப் பொருட்படுத்தாது, அது இன்னமும் தேவனுடைய பார்வையில் பாவமாகவே உள்ளது. அநீதியெல்லாம் பாவம் தான். நாம் வாசிக்கவிருக்கும் நான்காவது கூற்றானது யாக்கோபுவால் எழுதப்பட்டது. பாவம் என்றால் என்னவென்று யாக்கோபு கூறுகிறார்? [யாக். 4:17ஐ வாசிக்கவும்.] பாவம் என்றால் என்ன? [கோடிட்ட இடத்தில் "நன்மை செய்ய அறிந்தும் அதைச் செய்யாமற் போனால் அது பாவமாகும்" என்று எழுதி நிரப்பவும்.]

பாவம் பற்றிய முதல் மூன்று கூற்றுக்களும், தவறாகச் செயல்படுவது பாவம் என்பதை வெளிப்படுத்தின. நாம் நமது சொந்த தர அளவை களையோ அல்லது தேவனுடைய தர அளவைகளையோ மீறுவதன் காரணமாக தவறானவைகளாய் உள்ள தவறான செயல்களில் ஈடுபடுவதைப் பற்றி அவை குறிப்பிடுகின்றன. இத்துடன் கூட, நாம் அறிந்த நன்மையைச் செய்யத் தவறுவதும் பாவமாக உள்ளது என்று யாக்கோபு

எடுத்துரைக்கின்றார். தேவையில் உள்ள ஒரு நபருக்கு உதவ, தேவனுடைய சித்தத்தை மற்றவர்களுக்குப் போதிக்க, உதவி நிறைந்த வார்த்தை யொன்றைப் பேச, முதலியவற்றை நாம் அறிந்திருந்தும், அதைச் செய்யாமற் போனால், நாம் பாவம் செய்கின்றோம். நன்மை செய்ய அறிந்திருந்தும் நாம் செய்ய அறிந்துள்ள அந்த நன்மையைச் செய்யாதிருத்தல் என்பது பாவம் ஆகும்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இப்பகுதியில் நாம், சரியானதுதானா என்று நாம் சந்தேகப்படுபவற்றைச் செய்கின்ற பொழுது, நியாயப்பிரமாணத்தினால் அனுமதிக்கப்படாதவற்றைச் செய்கின்ற பொழுது, அநீதியான செயல் எதையும் செய்யும் பொழுது, நாம் செய்வதற்கு அறிந்த நன்மையைச் செய்யத் தவறும் பொழுது நாம் பாவம் செய்கின்றோம் என்று கற்றுக் கொண்டுள்ளோம்.

## II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?*

*பாவத்தைப் பற்றி நாம் கற்றுள்ளவைகளின் அடிப்படையில், உங்களைப் பற்றி நீங்கள் எவ்விதம் நியாயந்தீர்ப்பீர்கள்? நீங்கள் எப்பொழுதுமே சரியானவை என்று அறிந்துள்ளவற்றைச் செய்தும், நீங்கள் சந்தேகம் கொண்டுள்ளவற்றை எப்பொழுதுமே செய்யாமல் தவிர்த்தும் இருக்கின்றீர்களா? இயேசு போதித்த கொள்கைகளான அவருடைய பிரமாணத்தில் நீங்கள் எப்பொழுதுமே நிலை நின்றிருக்கின்றீர்களா? அநீதியான செயல்பாடு ஒவ்வொன்றிலும் இருந்து நீங்கள் எப்பொழுதுமே நிலை நின்றிருக்கின்றீர்களா? நீங்கள் செய்ய வேண்டும் என்று அறிந்த நன்மையை நீங்கள் எப்பொழுதுமே செய்திருக்கின்றீர்களா? இவை யாவற்றிற்கும் நீங்கள் "ஆம்" என்று பதில் அளிக்க முடியும் என்றால், நீங்கள் ஒருக்காலும் பாவம் செய்யவில்லை என்றாகும். இவை யாவற்றுக்கும் "ஆம்" என்று உண்மை நிறைந்த வகையில் பதில் அளிக்கக்கூடிய ஒருவரை நீங்கள் அறிந்துள்ளீர்களா?*

*1. எத்தனை பேர் பாவிகளாய் உள்ளனர்? [ரோமர் 3:23ஐ வாசிக்கவும்.] எத்தனை பேர் பாவிகளாய் உள்ளனர்? [கோடிட்ட இடத்தில் "எல்லாரும்" என்று எழுதி நிரப்பவும்.] நாம் பாவம் செய்யும் பொழுது தேவ மகிமையற்றவர்களாகின்றோம் அதாவது, அவருடைய பரிசுத்த இயல்பைப் பெற்றிருப்பதில் இருந்து தவறுகின்றோம் என்பதைக் கவனியுங்கள். நாம் வாழ வேண்டிய தராதரமாகத் தேவன் தம்மையே ஒப்புவித்துள்ளார் என்பதை நினைவுகூருங்கள். தேவன் பொய்யுரையாதவராய் இருக்கின்றார், எனவே நாம் பொய்யுரைக்கக் கூடாது. தேவன் களவு செய்வதில்லை, எனவே நாம் களவு செய்யக் கூடாது. தேவன் தம்மிடம் நல்லவர்களாய் இராதவர்களுக்கும் நல்லவராய் இருக்கின்றார். எனவே நாம் நம்மைத் தவறாக நடத்துகின்றவர்களிடமும் நல்லவர்களாய் இருக்க வேண்டும் (மத். 5:44-48). நாம் தேவனுடைய பண்புகளைப் போலச் செய்ய வேண்டியவர் களாய் இருக்கின்றோம். நாம் இதைச் செய்யத் தவறும் பொழுது பாவம் செய்கின்றோம். எல்லாரும் தங்களைப் படைத்த பரிசுத்த படைப்பாளரின் பரிசுத்த இயல்பைக் கொண்டிருக்கத் தவறியிருக்கின்றோம்.*

*2. எல்லாரும் பாவிகளாய் இருந்தால், நீதிமான் யாரேனும் இருக்கின்றாரா?* [ரோமர் *3:10*ஐ வாசிக்கவும்.] *எத்தனை பேர் நீதிமான்களாய் உள்ளனர்?* [கோடிட்ட இடத்தில் "ஒருவனும்" என்று எழுதி நிரப்பவும்.] தேவன் மட்டுமே நீதியுள்ளவராய் இருக்கின்றார். நம்மில் எவரும் நீதிமான் அல்ல.

*3. நாம் நீதிமான் என்றும், ஒருக்காலும் பாவம் செய்யவில்லை என்றும் கூறினால், நம்மைப் பற்றி தேவன் கூறுவதென்ன?* [*1* யோவா. *1:8*ஐ வாசிக்கவும்.] *நம்மைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?* [கோடிட்ட இடங்களில், "நம்மை நாமே," "வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்," மற்றும் "சத்தியம்" என்று எழுதி நிரப்பவும்.] நம்மிடத்தில் பாவம் இல்லை என்று நாம் சொல்வோமென்றால், நமக்கு நாம் நேர்மையாய் இருப்பதில்லை. நாம் யாவரும் பாவம் செய்துள்ளோம். நாம் பாவம் செய்துள்ளோம் என்று தேவன் தெளிவாக எடுத்துரைக்கின்றார் (ரோமர் *3:23*). தான் பாவம் செய்ததில்லை என்று கூறும் ஒருவர் தேவனைப் பொய்யர் என்று அழைக்கின்றார் (*1* யோவா. *1:10*) மற்றும் அவர் தாம் பாவியாய் இருக்கும் சூழ்நிலையிலிருந்து எவ்வகையிலும், மாறுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர் தம்மைத் தாமே வஞ்சித்துக் கொள்கின்றார். அவர் சத்தியத்தை எதிர்கொள்ளுவதில்லை எனவே அவருக்குள் சத்தியம் இருப்பதில்லை.

*நீங்கள் பாவம் செய்திருக்கவில்லை என்று நீங்கள் கூற விரும்ப மாட்டீர்கள் அல்லவா? பாவம் பற்றிய தேவனின் தராதரத்தை நான் சிந்திக்கும் பொழுது, நான் பாவியாய் இருக்கிறேன் என்ற உண்மையை நான் எதிர்கொள்ள வேண்டுமல்லவா? நீங்கள் பாவம் செய்துள்ளீர்கள் என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன?* நாம் யாவரும் பாவிகளாய் இருக்கின்றோம் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். தேவனுடைய தராதரத்தை நாம் யாவருமே மீறி நடந்து, நாம் செய்கின்ற யாவற்றிலும் அவரைப் போலிருக்கத் தவறி விட்டோம்.

## III. ***உங்களின் அடைவிடம்***

*எல்லாரும் பாவம் செய்துள்ளோம் என்பது ஒரு உண்மையாக உள்ளது. பாவமற்றவர்கள் என்று யாருமே இல்லை. நாம் மன்னிக்கப்படாத பாவிகளாகவோ அல்லது மன்னிக்கப்பட்ட அதாவது இரட்சிக்கப்பட்ட பாவிகளாகவோ இருக்கின்றோம். நீங்கள் எவ்வகைப்பட்டவராய் இருக்கின்றீர்கள்? ஒரு மன்னிக்கப்பட்ட பாவியாகவா அல்லது மன்னிக்கப் படாத பாவியாகவா? நீங்கள் மன்னிக்கப்படாதவராய் இருந்தால், உங்களின் அடைவிடம் எதுவாயிருக்கும், மற்றும் நீங்கள் இரட்சிக்கப் பட்டிருந்தால் உங்களின் அடைவிடம் எதுவாயிருக்கும்?*

*இடது புறம் உள்ளவர்களிடத்தில் இயேசு என்ன கூறுவார்?* [மத். *25:41*ஐ வாசிக்கவும்.] *எங்கு செல்லும்படி அவர் கூறுவார்?* "பாவி" என்பதன் கீழ் உள்ள முதல் [கோடிட்ட இடத்தில் "நித்திய அக்கினி" என்று எழுதி நிரப்பவும்.] *அந்த அக்கினி எப்பொழுது ஒழியும்? அந்த அக்கினி*

*என்றென்றும் ஒழியாது என்பது உறுதி (மாற். 9:48). அக்கினி என்றென்றும் ஒழியாதென்றால், தண்டனை என்றென்றும் தொடருவதாய் இருக்க வேண்டும். தண்டனை தொடர்ந்து இராதென்றால், அக்கினி தொடர்ந்து இருக்குமா? அக்கினியும் தண்டனையும் ''நித்தியமானவைகளாய்'' இருக்கின்றன (மத். 25:41, 46).*

*"நித்திய அக்கினி" மற்றும் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கான "நித்திய தண்டனை" என்பவற்றிற்கு நேரெதிராக, இரட்சிக்கப்பட்டவர்கள் எதைப் பெறுவார்கள்?* [மத். 25:46ஐ வாசிக்கவும்.] *வலது புறத்தில் இருப்பவர்கள் எதைப் பெறுவார்கள் என்று இயேசு கூறுகின்றார்?* [*'இரட்சிக்கப்பட்டவர்' என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில்* "நித்திய ஜீவன்" என்று எழுதி நிரப்பவும்.] நீதியற்றவர்களுக்கு *அக்கினி* எவ்வாறு நித்தியமானதாகவும் என்றென்றும் இருப்பதாகவும் உள்ளதோ அதே போன்று நீதிமான்களுக்கு *ஜீவன் (வாழ்வு)* என்பதும் நித்திய மானதாகவும் என்றென்றும் இருப்பதாகவும் உள்ளது. நீங்கள் நித்திய அக்கினியைப் பெறுவீர்களா அல்லது நித்திய ஜீவனைப் பெறுவீர்களா?

*துன்மார்க்கர் நித்திய அக்கினியில் என்ன செய்து கொண்டிருப்பார்கள்?* [வெளி. 14:11ஐ வாசிக்கவும்.] *அவர்களின் வாதையினுடைய புகை சதா காலங்களிலும் எழும்பிக் கொண்டிருக்கும், அவர்களுக்கு வாதையிலிருந்து என்ன கிடைக்காது? "பாவி" என்பதன் கீழ் உள்ள இரண்டாவது* [கோடிட்ட இடத்தில் ''இளைப்பாறுதல் இராது'' என்று எழுதி நிரப்பவும்.] வாதையானது தொடர்ந்து இருக்கும். அக்கினியில் இருப்பவர்கள் அக்கினி யின் விளைவிலிருந்து இளைப்பாறுதல் பெறமாட்டார்கள். *அது உண்மை யிலேயே நேரடியான அக்கினியாய் இருக்குமா?* இது ஒரு முக்கியமான கேள்வியாய் இருக்கலாம், ஆனால் இதற்கான நிச்சயமான பதிலை நாம் அறியாதிருக்கலாம். இருப்பினும், அந்த அக்கினி உண்மையான அக்கினி யாய் இராவிட்டாலும், "அக்கினி" என்ற வார்த்தைப் பயன்பாடானது, அந்த வாதை அக்கினியில் இருப்பது போலக் கடுமையாக இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள உதவுகின்றது.

*மன்னிக்கப்படாதவர்களுக்கான தண்டனைக்கு நேர்மாறான வகையில், இரட்சிக்கப்பட்டவர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்?* [வெளி. 14:13ஐ வாசிக்கவும்.] *அவர்கள் எதைப் பெறுவார்கள்?* [*''இரட்சிக்கப்பட்டவர்கள்'' என்பதன் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில்* ''இளைப்பாறுதல்'' என்று எழுதி நிரப்பவும்.] ''கர்த்தருக்குள் இருக்கின்றவர்கள்'' *இளைப்பாறுதல் அடைவார்கள்* என்பதைக் கவனியுங்கள். கர்த்தருக்குள் இருக்கின்றவர் யார்? "இரட்சிப்பு" என்ற பாடத் தாளில் இருந்து, ஞானஸ்நானம் பெறுவதினால்தான் நாம் கர்த்தருக்குள், இயேசுவுக்குள் வருகின்றோம் என்பதைக் கற்றோம் (ரோமர் 6:3; கலா. 3:27). [*பாடத் தாளின் பின்புறத்தில், ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாவது எவ்விதம் என்பதை வரைபடத்தின் மூலம் மீண்டும் விவரிக்கவும். இரட்சிக்கப்பட்டவர்களின் அடைவிடமாகிய பரலோகத் திற்கு நேரெதிராக, இழந்துபோகப்பட்டவர்களின் அடைவிடமாகிய நரகம் உள்ளது. (பக்கம் 242ஐப் பார்க்கவும்)* ]

மன்னிக்கப்படாத பாவிகள் தங்கள் தண்டனையிலிருந்து இளைப் பாறுதல் பெறமாட்டார்கள். அவர்களின் மறுசெயல் பற்றி இயேசு கூறியது என்ன? [மத். 25:30ஐ வாசிக்கவும்.] அவர்கள் எவ்விதம் மறுசெயல் செய்வார்கள்? [கோடிட்ட இடத்தில் "அழுகையும் பற்கடிப்பும்" என்று எழுதி நிரப்பவும்.] எனது நண்பர்களில் ஒருவர், தாம் கண்ட வாகன விபத்து ஒன்றைப் பற்றி என்னிடத்தில் கூறினார். அந்த வாகனம் திடீரென்று தீப்பற்றிக் கொண்ட வேளையில் அவர் அங்கு சென்று சேர்ந்தார். காரினுள் அகப்பட்டுக் கிடந்த அதன் ஓட்டுநர் உருக்குலைந்த முகத்துடன், வலியினால் தனது பற்களைக் கடித்துக் கொண்டு, தீயின் உக்கிரத்திலிருந்து தப்பிக்க, கதவைத் திறக்கும்படி நம்பிக்கைழிந்த நிலையில் முயற்சி செய்ததை எனது நண்பர் காண முடிந்தது. நித்திய அக்கினியால் தண்டிக்கப்படுபவர்கள், அழுதுகொண்டும் வேதனையினால் பற்களைக் கடித்துக்கொண்டும் இருப்பார்கள்.

இதற்கு நேர் மாறான வகையில், இரட்சிக்கப்பட்டவர்கள் இவ்வாழ் வில் கடினமான வேளைகளின் வழியே கடந்து சென்றிருப்பினும், வரவிருக்கும் வாழ்வில் மாறுபட்ட ஒரு அனுபவத்தை அடைவார்கள். அவர்களின் வாழ்வு எது போல இருக்கும்? [வெளி. 21:4ஐ வாசிக்கவும்.] அவர்கள் இனி ஒருபொழுதும் எதை அனுபவிக்க மாட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "துக்கமில்லை அலறுதலுமில்லை" என்று எழுதி நிரப்பவும்.] கடந்த காலத்தின் மகிழ்வற்ற உணர்வுகள் யாவும் முடிவடைந்து விடும். அவர்கள் இனி வருத்தம் அடைய மாட்டார்கள் மற்றும் ஒருபோதும் மீண்டும் அலற மாட்டார்கள்.

மன்னிக்கப்படாமல் உள்ள பாவி தனது தண்டனையில் மகிழ்வைப் பெற மாட்டார். அதற்குப் பதில் அவர் பெறுவது என்ன? [ரோமர் 2:9ஐ வாசிக்கவும்.] அவர் பெறுவது என்ன? [கோடிட்ட இடத்தில் "உபத்திரவமும் வியாகுலமும்" என்று எழுதி நிரப்பவும்.] பாவியாயிருப்பவர் புறம்பான வேதனையை மட்டுமின்றி வலிவார்ந்த உள்ளான பெருந்துக்கத்தையும் பெறுவார் என்பதை இந்த இரு வார்த்தைகளும் சுட்டிக்காட்டுகின்றன.

இப்படிப்பட்ட பயம் நிறைந்த வேதனைக்குப் பதிலாக, இரட்சிக்கப் பட்ட பாவிகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் தாங்கள் பெறும் பலனுக்குச் செய்யும் பதில்செயல் எப்படியிருக்கும்? [மத். 25:23ஐ வாசிக்கவும்.] அவர்கள் எதில் பிரவேசிப்பார்கள்? [கோடிட்ட இடத்தில் "சந்தோஷத்திற்குள்" என்று எழுதி நிரப்பவும்.] நீதிமான்களுக்கான பலன் என்பது வருத்தமும் வேதனையுமற்ற நித்திய மகிழ்ச்சியாக இருக்கும்.

இயேசு, பாவமும், வருத்தமும், மரணமும் உள்ள இந்த உலகை விட்டு, பரலோகத்தில் (யோவான் 20:17) தமது பிதாவுடன், நித்தியமான (2 கொரி. 4:18) உடல் ரீதியல்லாத ஆவி வாசம் செய்யும் தேவனுடைய இடத்திற்குக் கடந்து சென்றார். மன்னிக்கப்படாத பாவியாயிருப்பவர் இயேசுவுடன் இருக்கும்படி இவ்விதம் செல்ல இயலுமா? [யோவா. 8:21ஐ வாசிக்கவும்.] அவர் எதைச் செய்ய இயலாதவராய் இருப்பார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவிடம் செல்ல இயலாது" என்று எழுதி நிரப்பவும்.]

இரட்சிக்கப்பட்டுள்ள நபரின் விஷயத்தில் இது உண்மையாய் இருக்குமா? [யோவா. 14:3ஐ வாசிக்கவும்.] அவர் யாருடன் இருப்பார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவுடன் இருப்பார்" என்று எழுதி நிரப்பவும்.] தம் பாவத்தில் மரிக்கின்ற ஒருவர் ஒருக்காலும் இயேசுவுடன் இருக்கும்படி சேர முடியாது என்ற உண்மையானது, அவர் தம் பாவங்கள் மன்னிக்கப்பட்டால் இயேசுவுடன் இருக்கும்படி சேர முடியும் என்ற உண்மையை மறைமுகமாய் உணர்த்த வேண்டும். நித்தியமான பூமி என்பது இயேசுவின் நித்திய இல்லிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டுள்ள காரணத்தால் வரையறைக்குட்பட்ட இல்லிடங்களே அதில் இருக்கும் என்பதால் இரட்சிக்கப்பட்டவர்கள்கூட இயேசுவினிடத்தில் சென்றடைய முடியாது என்றால், மேற்சொன்ன கூற்றானது அர்த்தமற்றதாக இருக்கும். இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுவினிடத்தில் சென்று சேருவார்கள் (யோவா. 12:26).

துன்மார்க்கருடைய நித்திய இல்லிடம் என்னவாக இருக்கும்? [மத். 10:28ஐ வாசிக்கவும்.] அவர்கள் எங்கிருப்பார்கள்? [கோடிட்ட இடத்தில் "நரகம்" என்று எழுதி நிரப்பவும்.] இவ்விடத்தில் "அழித்தல்" என்ற வார்த்தையானது சிலர் தவறாக போதிப்பது போல நிர்மூலமாக்குவது என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, மத். 9:17ல் இதே கிரேக்க வார்த்தையினால் சுட்டிக்காட்டப்படுவது போல, வடிவமைப்பை அழித்தல் என்று அர்த்தப்படுகின்றது. திராட்ச இரசத் துருத்திகள் பாழாக்கப்படும் அதாவது அழிக்கப்படும். நரகம் என்பது நிர்மூலம் ஆகும் இடமாய் இராது, ஆனால் அதற்குப் பதிலாக, நித்திய அழிவின் இடமாக, அங்கு செல்பவர்களின் நித்திய அழிவுக்குரிய இடமாக இருக்கும் (2 தெச. 1:9). நித்திய தண்டனை என்பதே மன்னிக்கப்படாத பாவியின் அடைவிடமாய் இருக்கும்.

நரகத்தில் இருப்பதற்குப் பதிலாக, இரட்சிக்கப்பட்ட நபர் நித்தியத்திற்கும் எங்கு வாழ்வார்? [1 பேது. 1:3, 4ஐ வாசிக்கவும்.] இரட்சிக்கப்பட்டவர்களுக்கு முன்குறித்து வைக்கப்பட்டுள்ளது என்ன? [கோடிட்ட இடத்தில் "பரலோகம்" என்று எழுதி நிரப்பவும்.] இரட்சிக்கப்பட்ட யாவரும் பரலோகத்தில் இயேசுவுடன் இருக்கும்படி சேருவார்கள்.

பாவியின் தண்டனையை மீண்டும் கண்ணோக்குங்கள். அவர் இயேசுவுடன் இருக்க முடியாது, ஆனால் அதற்குப் பதிலாக அவர் நரகத்தில் உபத்திரவத்திலும் பெருந்துயரிலும் இருப்பார், அங்கு உள்ள நித்திய அக்கினியின் காரணத்தால் அவருக்கு அழுகையிலிருந்தும் தனது பற்கடிப்பிலிருந்தும் இளைப்பாறுதல் இராது.

இந்த அடைவிடத்திற்கு நேர் மாறாக, இரட்சிக்கப்பட்டவர்களைக் கவனியுங்கள். இரட்சிக்கப்பட்ட நபர் இயேசுவுடன் பரலோகத்தில் இருப்பார், அங்கு வருத்தமும் அலறுதலும் இனி ஒரு போதுமிராத வகையில், அவர் மகிழ்வைப் பெற்றிருப்பார். அவர் தமது பிரயாசங்கள் எல்லாவற்றையும் விட்டு ஓய்ந்திருப்பார் மற்றும் தேவனுடன் முடிவில்லாத வாழ்வை மகிழ்வுடன் அனுபவிப்பார்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இரட்சிக்கப்

பட்டவர் மற்றும் பாவி ஆகியோரின் அடைவிடங்கள் முற்றிலும் மாறுபட்டவையாய் இருக்கும் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இரட்சிக்கப்பட்டவர்கள் என்றென்றும் பரலோகத்தின் மகிழ்ச்சிகளை அனுபவிக்கச் சென்று சேருகையில், பாவிகள் நித்திய அக்கினியால் உருவாக்கப்பட்ட சித்திரவதையின் பெருந்துயரை அனுபவிப்பார்கள்.

## IV. *அடைவிடத்தைத் தீர்மானிப்பது எது?*

நமது அடைவிடத்தைத் தீர்மானிப்பதில் நாம் ஏதேனும் செய்ய முடியுமா? யார் தண்டிக்கப்படுவார்கள்? [ரோமர் 2:8ஐ வாசிக்கவும்.] *யார்* தண்டிக்கப்படுவார்கள்? [கோடிட்ட இடத்தில் "சத்தியத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] இது வேதாகமத்தின் சீரான போதனையாக உள்ளதா? [2 தெச. 1:8ஐ வாசிக்கவும்.] *யார்* தண்டிக்கப்படுவார்கள்? [கோடிட்ட இடத்தில் "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.]

இவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றால், யாருக்குப் பலனளிக்கப்படும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? [மத். 7:21ஐ வாசிக்கவும்.] இராஜ்யத்திற்குள் *யார்* பிரவேசிப்பார்கள்? [கோடிட்ட இடத்தில் "பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசு *யாரை* ஆசீர்வதிப்பார்? [எபி. 5:9ஐ வாசிக்கவும்.] இயேசு நித்திய இரட்சிப்பை *யாருக்குக்* கொடுப்பார்? [கோடிட்ட இடத்தில் "அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இயேசுவின் மூலம் உண்டாயிருக்கிற சத்தியத்திற்கு (யோவா. 1:17) நாம் *கீழ்ப்படியாதிருந்தால்*, நாம் நித்தியத்திற்கும் தண்டிக்கப்படுவோம், ஆனால் அவருக்கு நாம் கீழ்ப்படிந்தால், நாம் நித்திய இரட்சிப்பைப் பெறுவோம்.

## தொகுப்புரை

இது ஒரு முக்கியமான பாடமாக உள்ளது, ஏனெனில் இதில் நாம், மகிழ்வுள்ள ஒரு நித்திய அடைவிடத்தை அடைய நாம் என்ன செய்ய முடியும்? என்பதைக் கற்றுக் கொண்டுள்ளோம்.

I. *பாவம் என்றால் என்ன?* சரியானது எது என்பதில் நாம் சந்தேகம் கொண்டுள்ளதைச் செய்தல், நியாயப்பிரமாணத்தை மீறுதல், எல்லா அநீதியும், மற்றும் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யாமல் போகுதல் ஆகியவை பாவம் ஆகும்.

II. *நீங்கள் ஒரு பாவியாய் இருக்கின்றீர்களா?* ஆம். நாம் யாவருமே பாவிகளாய் இருக்கின்றோம்.

III. *பாவி மற்றும் இரட்சிக்கப்பட்டவர் ஆகியோரின் அடைவிடம் எப்படியிருக்கும்?* பாவியாயிருப்பவர் இயேசு மற்றும் தேவன் ஆகியோரின் பிரசன்னமின்றி வெறுமையாய் உள்ள நரகத்தில் தண்டனையை அனுபவிப்பார். இரட்சிக்கப்பட்ட நபர் பரலோகத்தில் என்றென்றும் இயேசு மற்றும் தேவன் ஆகியோரின் பிரசன்னத்தை மகிழ்வுடன் அனுபவிப்பார்.

IV. *நீங்கள் செய்கின்ற அல்லது செய்யாது விடுகின்ற எந்த விஷயம்*

உங்களின் நித்திய அடைவிடத்தைத் தீர்மானம் செய்யும்? உங்களின் அடைவிடமானது, இயேசு நமக்குக் கொண்டு வந்த சத்தியத்திற்கு நீங்கள் கீழ்ப்படிகின்றீர்களா அல்லவா என்பதால் தீர்மானம் செய்யப்படும்.

நீங்கள் இயேசுவுடன் பரலோகத்தில் சென்று சேருவீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கின்றீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்க வில்லையென்றால், இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் செய்யத் தேவையானது என்ன? நீங்கள் ஏன் இப்பொழுதே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கென்று வாழக் கூடாது? நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தால் எல்லாவற்றையும் ஆதாயப்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் மதிப்புள்ள எதையும் இழக்க வேண்டியிராது. ஏன் இப்பொழுதே கீழ்ப்படியக் கூடாது? இயேசுவுக்குக் கீழ்ப்படிய நீங்கள் திட்டமிட்டிருந்தால், கீழ்ப்படிய இதுவே மிகச் சிறந்த வேளையாக உள்ளது. நீங்கள் கீழ்ப்படிந்த பிறகு, இயேசு உங்களோடு இருப்பார் என்றும், நித்தியத்திற்கும் நீங்கள் அவருடன் வாழும்படி அவர் உங்களுக்கு ஆவியானவர் மூலம் உதவுவார் (எபே. 3:16) என்றும் நீங்கள் உறுதியாய் நம்பிக்கை பெறலாம். இயேசுவுடனான அன்றாட ஐக்கியத்தையும் இவ்வாழ்விற்குப் பிறகு அவருடனான நித்தியத்தின் மகிழ்ச்சியையும் நீங்கள் விரும்பவில்லையா? நீங்கள் என்ன முடிவெடுக்கும்படி இயேசு விரும்புகின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இப்பொழுதே நீங்கள் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் செய்யப்படுவதற்குத் தயாரா?